# த ஸ்ராண்டெட் கிரெடிற் பினான்ஸ் லிமிட்டெட்
# வைப்பாளர்களுக்கான அறிவித்தல்

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

த ஸ்ராண்டெட் கிரெடிற் பினான்ஸ் லிமிட்டெட்டிற்கு நிதித் தொழிலைக் கொண்டு நடாத்துவதற்கு வழங்கப்பட்ட உரிமம் 2018 யூலை 25 ஆம் திகதியன்று இரத்து செய்யப்பட்டுள்ளதுடன், இலங்கை வைப்புக்காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித்திட்டத்தின் கீழ் ரூ.1,100,000.00 என்ற உயர்ந்தபட்சத் தொகைக்குட்பட்டு வைப்பாளர்களுக்கு இழப்பீடளிப்பதற்கு இலங்கை மத்தியவங்கி வழிமுறைகளை எடுத்திருந்தது.

2021 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க இலங்கை வைப்புக்காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித்திட்ட ஒழுங்குவிதிகளின் நியதிகளுக்கமைய
**த ஸ்ராண்டெட் கிரெடிற் பினான்ஸ் லிமிட்டெட்டின்**
காப்பீடு செய்யப்பட்ட வைப்பாளர்களிடமிருந்து உரிமை கோரல்களை ஏற்றுக் கொள்வதற்கான **இறுதித் திகதி**
**2022 யூலை 25* ஆகும்.**

இழப்பீட்டுக் கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்வதற்கு உரித்துடைய, ஆயினும் இழப்பீட்டுக் கொடுப்பனவுகளுக்கான தமது உரிமை கோரல்களை இதுவரை சமர்ப்பித்திராத த ஸ்ராண்டெட் கிரெடிற் பினான்ஸ் லிமிட்டெட்டின் அனைத்து வைப்பாளர்களும்/ சட்ட ரீதியான பயன்பெறுநர்களும் முறையாகப்பூர்த்தி செய்யப்பட்ட பிரகடனங்களுடனான உரிமை கோரல் படிவங்களை அல்லது ஒப்புதல் படிவங்களைக் குறித்துரைக்கப்பட்ட படிவங்களின் அறிவுறுத்தல்களில் தரப்பட்டவாறு வேண்டப்பட்ட ஆவணங்களுடன் சேர்த்து இலங்கை மத்தியவங்கியின் தலைமை அலுவலகத்தின் அஞ்சல் அறைக்கு நேரடியாகவோ அல்லது பின்வரும் முகவரிக்குப் பதிவுத்தபால் மூலமாகவோ 2022 யூலை 25 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் ஒப்படைக்குமாறு வேண்டப்படுகின்றனர். மேலும், கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் தயவுசெய்து "TSCFL" எனக்குறிப்பிடவும்.

'பிரகடனத்துடனான உரிமை கோரல் படிவம்' மற்றும் 'ஒப்புதல் படிவம்' என்பன 'https://www.cbsl.gov.lk/en/public-notices' என்ற இலங்கை மத்திய வங்கியின் வெப்தளத்தில் கிடைக்கப்பெறுவதுடன் இவற்றின் பிரதிகளை இலங்கை மத்திய வங்கியின் தலைமைக் காரியாலயத்திலும் மாத்தளை, மாத்தறை, அநுராதபுரம், திருகோணமலை, நுவரெலியா மற்றும் கிளிநொச்சி ஆகிய இடங்களிலுள்ள இலங்கை மத்திய வங்கியின் பிராந்திய அலுவலகங்களிலிருந்தும் பெற்றுக் கொள்ளலாம்.

**மேலதிக விபரங்களுக்கு: 011 2477261, 011 2398788, 011 2477974**

* 2022 யூலை 25ஆம் திகதிக்கு முன்னர் த ஸ்ராண்டெட் கிரெடிற் பினான்ஸ் லிமிட்டெட்டின் தீர்த்துக்கட்டுதல் தொடர்பில் தகைமை வாய்ந்த நீதிமன்றத்தால் தீர்த்துக்கட்டுபவர் நியமிக்கப்படின் தீர்த்துக்கட்டுபவரின் அத்தகைய நியமனத்திகதி முறையாகப்பூர்த்தி செய்யப்பட்ட உரிமை கோரல்களை ஏற்றுக் கொள்வதற்கான இறுதித் திகதியாக இருக்கும்.

**பணிப்பாளர்**
**தீர்மானங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்களம்**
**இலங்கை மத்திய வங்கி**
**இல.30, சனாதிபதி மாவத்தை**
**கொழும்பு 01**